கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 033
01 செப்டம்பர் 2010
தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# ‘பதிவு-சங்கதி வலையமைப்பிற்கு எதிராக நானே அறிக்கை வெளியிட்டேன்!’
# காகிதப்புலி இராமு.சுபன் ஒப்புதல் வாக்குமூலம்!!

தமிழ்த் தேசியத்தின் மீதான பற்றுறுதியுடன் செயற்பட்டு வரும் இணைய ஊடகங்களான பதிவு-சங்கதி வலையமைப்பிற்கு எதிராக தானே அறிக்கை வெளியிட்டதாக காகிதப்புலி இராமு.சுபன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இலட்சிய நெறிபிறழ்ந்து இயங்கும் கே.பியையும், அவரது குழுவினரையும் உலகத் தமிழர்களிடையே அம்பலப்படுத்தி வரும் பதிவு-சங்கதி வலையமைப்பிற்கு எதிராக கடந்த மாத முற்பகுதியில் காகிதப்புலி இராமு.சுபன் அவர்களால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து காகிதப்புலிகளின் சுயரூபத்தை அம்பலப்படுத்தி, பதிலறிக்கை ஒன்று பதிவு-சங்கதி வலையமைப்பினரால் விடுக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் தமது அறிககையை மீளப்பெற முற்பட்ட காகிதப்புலி இராமு.சுபன், பதிவு-சங்கதி வலையமைப்பிற்கு எதிராக எந்தவொரு அறிக்கையையும் தாங்கள் வெளியிடவில்லை என்றும், பதிவு-சங்கதி வலையமைப்பினரே தனது பெயரில் அறிக்கையை வெளியிட்டு, அதற்கான பதில் அறிக்கையையும் விடுத்ததாகவும் பொய்யுரைத்திருந்தார்.

இதனை நியாயப்படுத்தும் வகையில் கே.பி கும்பலை சேர்ந்த தனம், கிருஸ்ணா அம்பலவாணர், குலம், வரதர், தங்கவேலு, மனோ, சர்வே, சிவா சின்னப்பொடி, சுதன்ராஜ் போன்ற தேசவிரோதிகளால் மக்களிடையே வதந்திகள் பரப்பப்பட்டு வந்தன. இதற்கு ஒத்தூதும் வகையில் நோர்வேயில் உள்ள மோகன் என்பரால் இயக்கப்படும் யாழ் இணையத்தளமும் வலைப்பதிவுகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் காகிதப்புலி இராமு.சுபனின் தொலைபேசி உரையாடல்களை தொடர்ந்தும் ஒட்டுக்கேட்டு வரும் எமது ஊடகப் புலனாய்வாளர்கள், கனடாவில் உள்ள நக்கீரன் என்றழைக்கப்படும் கிழட்டுநரி தங்கவேலுடன் இராமு.சுபன் உரையாடிய பொழுது பதிவுசெய்யப்பட்ட ஒலிப்பதிவு வடிவத்தை எமது ஆசிரியர் பீடத்திடம் கையளித்துள்ளனர்.

சகல கிளைகளையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு தாம் முற்பட்டதாகவும், இதற்கு மறுப்புத் தெரிவித்த கிளைகளுக்கு பாடம்புகட்டும் வகையில் பதிவு-சங்கதி வலையமைப்பிற்கு எதிராக அறிக்கை வெளியிடுவதற்கான முடிவை தான் எடுத்ததாகவும், கிழட்டுநரி தங்கவேலுவிடம் இராமு.சுபன் தெரிவித்துள்ளார்.

இதன் ஒலிவடிவத்தை உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக இத்துடன் இணைத்துள்ளோம்.

# சுக்ளா - சிறினீவாசன் தலைமையில் சுவிசில் கலந்துரையாடல்

எதிர்வரும் செப்டம்பர் 19 நாள் சுவிஸ் போர்ண் தமிழர் இல்லத்தில் கே.பி, மற்றும் விநா(ய்)யகத்தின் ஆலோசனையின் கீழ், சுக்ளா — சிறினீவாசன் தலைமையில் சுவிசில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

தற்போது கனடாவில் இருக்கும் விநாயகம், ஆலோசனைகளை தொலைபேசியூடாக வழங்கியுள்ளார். ஊடகப்புலனாய்வாளர்களால் ஓட்டுக்கேட்கப்பட்ட இவரது தொலைபேசி உரையாடல்கள் தற்போது எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. விரைவில் மக்களுக்கு தருவோம். சுவிசில் இக்கலந்துரையாடலில் முன்னாள் போராளிகள் அழைக்கப்பட்டுள்ளார்கள். கே.பியின் நயவஞ்சக திட்டத்துக்கு பலியாக்கும் நோக்குடன் இக்கூட்டம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. கே.பியின் திட்டத்தில் இயங்கும் நாடு கடந்த அரசுக்கு ஆதரவாக வேலைகளை முன்னெடுக்கும் முகமாக தற்போது களமிறக்கப்பட்டுள்ளனர். சுக்ளா மற்றும் சிறீனிவாசன் தீவிரமாக பிரான்சில் தொப்பி மனோவுடன் தமது வேலைகளை முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கலந்துரையாடலுக்கு பிரான்சில் இருக்கும் காகிதப்புலிகளின் நிதியமைச்சர் சூரி கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**எனவே,**

**எமதன்புக்குரிய முன்னாள் போராளிகளே!**

**தலைவரின் இருப்பை மறுதலிக்கும் இவர்கள் போன்றோரை இனம்கண்டு துூர விலகி நில்லுங்கள். ஒரு காலத்தில் தலைவரின் நிழலில் பணியாற்றிய நீங்கள் இதற்குத் துணைபோக மாட்டீர்கள் என்பதை நாமறிவோம்.**

**நன்றி.**

**“கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு”**

# மறுஆய்வு இணையத்தின் இயக்குனராக சுதன்ராஜ் அடையாளம் காணப்பட்டார்!



கே.பி மற்றும் இராமு.சுபன் கும்பலின் பரப்புரை ஊடகமாக விளங்கும் மறுஆய்வு இணைய வலைப்பூவின் இயக்குனராக பிரான்சில் உள்ள சுதன்ராஜ் செயற்படுவது கறுப்பின் ஊடகப் புலனாய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஜி.ரி.வி தொலைக்காட்சியின் இயக்குனர்களில் ஒருவரான கிருஸ்ணா என்பவரின் பின்புலத்துடன் மறுஆய்வு இணைய வலைப்பூ இயங்குவது தொடர்பான தகவல்கள் ஏற்கனவே கசிந்திருந்த நிலையில், இதனை பிரான்ஸில் இருந்து சுதன்ராஜ் இயக்கி வருவதை எமது ஊடகப் புலனாய்வாளர்கள் தற்பொழுது கண்டறிந்துள்ளனர்.



கே.பியின் வலதுகையாக விளங்கும் தொப்பி மனோவின் உதவியுடன், வாக்குமோசடியூடாக பிரான்சில் நாடுகடந்த அரசின் உறுப்பினராகப் பதவியேற்ற சுதன்ராஜ், 'என்ரை ஐயோ' என்ற இணைய வலைப்பூவை இயக்கி வருகின்றார். இது தொடர்பாக இராமு.சுபனுடன் சுதன்ராஜ் உரையாடிய பொழுது பதிவுசெய்யப்பட்ட ஒலிப்பதிவு வடிவம் எமது ஊடகப் புலனாய்வாளர்களின் கைகளில் சிக்கியுள்ளது.

தமிழ்த் தேசிய உணர்வாளர்களை தேசிய மக்குகள் என்று வர்ணிக்கும் இந்த நாடுகடந்த மக்கு, முன்னர் ரி.ரி.என் தொலைக்காட்சியில் பணியாற்றியிருந்தார். பிரான்ஸில் தமிழ்க் குறும்படங்களை எடுத்து தோல்வியடைந்த இவர், 2003ஆம் ஆண்டு ஏ.சி.தாசீசியஸ் - வரதர் ஆகியோரின் காலடியில் விழுந்து ரி.ரி.என் தொலைக்காட்சியில் அறிவிப்பாளராக இணைந்து கொண்டார். வரதரின் ஆசீர்வாதத்துடன் மன்மதக்குஞ்சு என்.ரி.ஜெகனை ரி.ரி.என் தொலைக் காட்சியை விட்டு விரட்டியடித்த இவர், பின்னர் ஜெகனுக்குப் போட்டியாக நிகழ்ச்சி ஒன்றையும் நடத்தி வந்தார்.

எனினும் 2004ஆம் ஆண்டு ரி.ரி.என் தொலைக்காட்சியை விட்டு வரதர் விரட்டியடிக்கப்பட்டதும், அவரோடு ஏ.சி.தாசீசியசும் வெளியேற சிறிது காலத்திற்கு ரி.ரி.என் தொலைக் காட்சியில் இயங்கிய இவர், பின்னர் ரி.ரி.என் தொலைக்காட்சிக்கு பிரான்ஸ் அரசால் தடைவிதிக்கப்பட்டதும் மீண்டும் ஏ.சி.தாசீசியசுடன் இணைந்து வளரி என்ற பெயரில் இணையத் தொலைக் காட்சி ஒன்றை தொடங்கியிருந்தார்.

கறுப்பின் ஊடகப் புலனாய்வாளர்களுக்கு கிடைத்துள்ள நம்பகமான தகவல்களின் படி, ரி.ரி.என் தொலைக்காட்சியில் பணிபுரிந்த குருபரன், சிவா சின்னப்பொடி, கலையழகன், கொலின்ஸ் ஆகியோரும், சுதன்ராஜும் இறுதி நேரத்தில் ரி.ரி.என் தொலைக்காட்சிக்கு சொந்தமான பல்லாயிரம் யூரோக்கள் பெறுமதியான உபகரணங்களை சூறையாடிச் சென்றிருந்தனர். ரி.ரி.என் தொலைக் காட்சியை பிரான்ஸ் அரசு தடை செய்வதற்கு இவர்களே காரணமாக அமைந்திருந்தனர்.

கே.பியின் வலதுகையான மனோவின் பின்னால் தற்பொழுது நாய்க்குட்டிகள் போன்று சுதன்ராஜும், அவரது சகபாடிகளான பரணி, நிதிராஜ், இளங்கோ, சுபா, சுபாஸ், சிவா சின்னப் பொடி போன்ற துரோகிகள் இழுபட்டுத் திரிகின்றனர்.

இவர்களில் சுபாஸ் என்பவர் இலண்டனில் உள்ள காகிதப்புலித் தொழிலதிபர் தனத்தின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஜி.ரி.வியின் இயக்குனர்களில் ஒருவரான கிருஸ்ணாவின் ஆசானாக விளங்கும் தொழிலதிபர் தனம், மறுஆய்வு இணையத்தில் வெளியிட வேண்டிய செய்திகள் தொடர்பாக நாடுகடந்த மக்கு சுதன்ராஜிற்கு ஆலோசனை வழங்கி வருவது எமது ஊடகப் புலனாய்வாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை
இணையத்தில் கறுப்பு
http://thesapuyal.wordpress.com/